# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2226 - 2021 අප්‍රේල් මස 30 වැනි සිකුරාදා - 2021.04.30

*2226 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 236 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.-** அவசரகால பொதுச் சுகாதாரம் சட்டமூலம் 2021, ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2021, மே மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, மே மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*



235 - B 082226 - 353 (2021/04)

# நானாவித அறிவித்தல்கள்

## ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல்

வணிக நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் (கொழும்பில் இடம் பெறுகின்ற)

**மேல் மாகாண(சிவில்) மேல் நீதிமன்றத்தில்**

மாஸ் கெபிடல் (பிரைவேட்) லிமிட்டட், 10 ஆம் மாடி, எப்ட்கென் ஸ்பென்ஸ் கோபுரம், இல. 315, வொக்சுவல் வீதி, கொழும்பு 02.

வழக்கு இலக்கம் :
HC(Civil) 21/2021/CO
தன்மை: கம்பனியை ஒடுக்குதல்

மற்றும்

ஒடுக்குதல் சட்ட விதிகள் 1939 உடன் சேர்த்து வாசிக்கக் கூடிய 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பகுதி XII ஆம் பிரிவுக்கு ஏற்ப நீதிமன்றத்தால் ஒடுக்குவதற்கான ஒரு விண்ணப்பம் தொடர்பான விடயம்.

ஈசி டிஸ்ட்ரிபியூஷன் (பிரைவேட்) லிமிட்டட், இல. 17, சமகி மாவத்தை, போருபன வீதி, இரத்மலானை.

*மனுதாரர்.*

வணிக நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பது தொடர்பில் (கொழும்பில் நடைபெறுகின்ற) மேல் மாகாண, மேல் நீதிமன்றத்தின் மூலம் மேலே பெயர் குறிப்பிட்ட கம்பனியை ஒடுக்குவதற்காக இல.17, சமகி மாவத்தை, போருபன வீதி, இரத்மலான என்ற முகவரியில் உள்ள ஈசி டிஸ்ட்ரிபியூஷன் (பிரைவேட்) லிமிட்டட் நிறுவனத்தால் 2021, மாச்சு மாதம் 04 ஆந் திகதி சொல்லப்பட்ட நீதிமன்றத்துக்கு மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதோடு அத்தகைய மனுவை 2021, மே மாதம் 25 ஆந் திகதி நீதிமன்றத்தில் விளக்கத்திற்கு எடுப்பதற்கு நியமிக்கப்பட்டிருக்கின்றது என்பதோடு அத்தகைய மனு தொடர்பில் கட்டளையொன்றைப் பிறப்பித்தல் தொடர்பில் ஆதரிப்பதற்கு அல்லது எதிர்ப்பதற்கு விரும்புகின்ற அத்தகைய நிறுவனத்தில் எவரேனும் கடன் கொடுநருக்கு அல்லது பங்களிப்பாளருக்கு அத்தகைய நோக்கத்துக்காக அத்தகைய விசாரணை இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட முறையில் அல்லது அவரின் சட்டத்தரணி மூலம் ஆஜராகலாம் என்பதோடு சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன் கொடுநர் அல்லது பங்களிப்புச் செய்பவருக்கு சொல்லப்பட்ட மனுவின் பிரதியொன்று கையொப்பமிடப்பட்டு அதற்கான குறித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்த வேண்டுவதன் மூலம் வழங்கப்படும் என இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

கையொப்பம் : தாரக சச்சிந்ர ஜயதிலக,
இல.80/4,
சிகெரா வீதி,
மாதிவல, கோட்டே.

**குறிப்பு**.- சொல்லப்பட்ட மனு மீதான விசாரணையில் தோன்றுவதற்கு விரும்புகின்ற எவரேனும் ஆள், அவரின் விருப்பத்தை எழுத்து மூலம் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட தாரக சசிந்த்ர ஜயதிலக அவர்களுக்கு சேர்ப்பிக்க அல்லது தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். அத்தகைய அறிவித்தலில் ஆளின் பெயர், முகவரி அல்லது நிறுவனம் ஒன்றாயின் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி என்பவற்றைக் குறிப்பிட்டு குறிப்பிட்ட ஆளினால் அல்லது நிறுவனத்தால் அல்லது அவரின் அல்லது அதன் சட்டத்தரணியால் (எவரேனும் இருந்தால்) கையொப்பமிட்டு 2021, மே மாதம் 24 ஆந் திகதி மாலை 6.00 மணிக்கு முன்னர் சேர்ப்பிக்க வேண்டும் அல்லது தபால் செய்யப்பட்டால் உரிய நேரத்தில் கிடைக்கக் கூடியதாக மேலே பெயர் குறிப்பிட்டவருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தாரக சச்சிந்ர ஜயதிலக,
இல.80/4,
சிகெரா வீதி,
மாதிவல,கோட்டே.

4-792